[1975 அக்டோபர் 23

திரு. மா. வெ. கரிவேங்கடம்: தருமபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட இருக்கும் தொழிற்சாலையில் எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும்? அது எந்த நிலையில் இப்போது இருக்கிறது? அது எப்போது முடிவுறும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 500 பேருக்கு இதனால் வேலை கிடைக்கலாம் என்ற விவரம் இருக்கிறது.

விவசாய அதிகாரிகள் குழு வருகை

*15 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் செப்டம்பர் மாத அளவில், பல நாட்டு விவசாய அதிகாரிகள் குழு தமிழகத்திற்கு வருகை தந்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: ஓர் விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

* 16. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a British Team had visited villages in Chingleput district on 7th October 1974 to study the Agricultural Production Programme; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: A statement ** is placed on the Table of the House.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பல நாட்டு விவசாய அதிகாரிகள் நம்முடைய விவசாயப் பகுதியைப் பார்த்துவிட்டு கருத்து ஏதேனும் தெரிவித்திருக்கிறார்களா? நம்முடைய விவசாய முன்னேற்றத்திற்கு உதவி செய்யும் வகையில் விருப்பம் தெரிவித்திருக்கிறார்களா?

---

* 225-226 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

** 226-228 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1975 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : வெளிநாட்டிலிருந்து வருகிற வேளாண்மை விஞ்ஞானிகள் குறிப்பாக விஸ்தரிப்பு வேலையைப் பற்றிக் கேட்கிருர்கள். எக்ஸ்டென்ஷன் ஒர்க் எவ்வாறு செய்யப்படுகிறது என்பதைப் பற்றிக் கேட்டறிந்து சென்றிருக்கிருர்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த இரண்டு குழுக்களிலே மிகத் தேர்ச்சி பெற்றவர்கள் கலந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. எந்தத் திட்டத்தின் அடிப்படையில் அவர்கள் வந்தார்கள், பார்த்தார்கள், பாராட்டிவிட்டு சென்ருர்கள் என்று மட்டுமே இதிலே இருக்கிறது. நுண்ணறிவு படைத்தவர்கள் பார்த்துவிட்டு பாராட்டிவிட்டு மட்டும் சென்ருர்களா அல்லது யோசனைகளையும் தெரிவித்திருக்கிருர்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : குறிப்பாக வேளாண்மை விஞ்ஞானிகள், புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்படுகிற நுட்பங்கள் விவசாயிகளுக்கு எவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றித்தான் கேட்டார்கள். அவர்கள் நாட்டில் அவர்கள் எவ்வாறு செய்கிருர்கள் என்பதையும் தெரிவித்தார்கள். ஈரான் நாட்டிலிருந்து வந்தவர், அங்கெல்லாம் மாதிரிப் பண்ணைகள் வைத்து—திரு. மாரிமுத்து அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள்—விவசாயிகளை அதற்கு அழைத்துச் சென்று காட்டுவதாகச் சொன்ஞர்கள். இங்கே விஸ்தரிப்பு அதிகாரிகள் மூலமாக பிளாக்குக்கு இரண்டு பேர், நான்கு பேர் என்று போட்டு அவர்கள் மூலம் விவசாயிகள் புதிய முறைகளை அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. இவற்றை எல்லாம் அவர்கள் பார்த்து இங்கே தீவிரமான முறையில் செயல்படுகிறது என்று கருத்துத் தெரிவித் திருக்கிருர்கள்.

திரு. என். கே. பழனிசாமி: ராயல் காலேஜ் ஆஃப் டிபென்ஸ் ஸ்டடிஸ் என்று இருக்கிறது. விவசாயத்திற்கும் ராயல் காலேஜ் ஆப் டிபென்ஸ் ஸ்டடிசுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? அவர்கள் இங்கிருக்கும் விவசாயக் கல்லூரியைப் பற்றி ஆராய்ந்து ஏதேனும் பரிந்துரைகள் செய்தார்களா? அல்லது இங்கிருக்கும் விஷயங்களை அவர்கள் எழுதிக் கொண்டு போய் அவர்களுடைய நாட்டிலே போய்ச் சொன்ஞர்களா?

[1975 அக்டோபர் 23

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ராயல் காலேஜ் ஆப் டிபென்ஸ் ஸ்டடிஸ் என்பதிலே வேளாண்மையும் அடங்கியிருக்கிறது என்று சொன்னார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: பல நாட்டு விவசாய அதிகாரிகள் வந்து சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். குறிப்பாக, ஜப்பான் போன்ற நாடுகளைவிட சராசரி உற்பத்தி இங்கு குறைவாக இருப்பதைப் பார்க்கிறோம். அதற்கு அவர்கள் சொல்லும் காரணங்களில் சிறு சிறு உடைமைகள் அதிகமாக இருந்தால் உற்பத்தி பெருகும், இங்கு பெரிய பெரிய நிலவுடைமையாளர்களாக இருப்பதால் உற்பத்தி பெருக்கம் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்திருக்கும் அறிக்கையில் நீங்கள் சொல்லுவது இருக்கிறதா?

திரு. சோ. அழகர்சாமி: தூதுகோஷ்டி வந்து இதைப் பற்றி என்ன கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சராசரி உற்பத்தியைப் பற்றி அவர்கள் குறை சொல்லவில்லை. பொதுவாக, தமிழ்நாட்டில் நெல் உற்பத்தியைப் பற்றிச் சொல்லுகிறபோது சராசரி ஏக்கர் ஒன்றுக்கு 20 குவின்டால் உற்பத்தியாவதை அவர்கள் பாராட்டினார்களே தவிர அதற்கு எதிர்ப்புச் சொல்லவில்லை. நவீன முறைகள் எவ்வாறு கையாளப்படுகின்றன, விஸ்தரிப்புப் பணிகள் எவ்வாறு நடக்கின்றன என்பதைப் பற்றித்தான் அவர்கள் கவனம் செலுத்தினார்கள்.

திரு. அ. ஆறுமுகம்: பிரிட்டிஷ் குழு நம்முடைய நாட்டு விவசாய முறைகளைப்பற்றி பாராட்டிய நேரத்தில் நம்முடைய நாட்டு விவசாய முறைகளுக்கும் வெளிநாட்டு விவசாய முறைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளைப் பற்றி கருத்துத் தெரிவித்தார்களா? அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பிரிட்டிஷ் குழு என்பதிலே பல நாடுகள் அடங்கியுள்ளன. நம்முடைய நாட்டிலே விளைகின்ற பொருள்கள் பல வெளிநாடுகளிலே விளைவதில்லை. இங்கிலாந்தில் நெல் விளைவதில்லை. அவர்கள் குறிப்பாக நெல் விளைச்சல் எப்படி நடக்கிறது என்று பார்த்தார்கள். ஆராய்ச்சி

1975 அக்டோபர் 23]

மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற புதிய முறைகளை விவசாயிகள் எவ்வாறு அறிந்து செயற்படுத்துகிறார்கள் என்பதைப் பற்றித் தான் குறிப்பாக அவர்கள் பார்வையிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து அங்கிருந்து வந்த நிபுணர் மாடல் பார்ம்ஸ் அங்கு வைத்திருப்பதாகவும் அதே முறையை இங்கே கையாள வசதியிருக்கிறதா என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதாகத் தெரிவித்தார்கள். அந்த வகையில் இங்கே மாவட்டத்திற்கு ஒரு மாடல் பார்ம் ஆரம்பிப்பதற்கான திட்டமுண்டா? அரசுப் பண்ணை ஆரம்பித்திருக்கிறார்களே. அவற்றை மாடல் பார்ம்ஸ் ஆக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அரசுப் பண்ணையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு மாதிரிப் பண்ணையை, மாடல் பார்ம்ஸை, நடத்தலாம் என்று முதல் அமைச்சர் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை வேளாண்மைத் துறை ஆராய்ந்து பார்த்து கூடியவரையில் அதை நடைமுறைப்படுத்த எண்ணம் இருக்கிறது.

விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்

* 17 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சோளம், கம்பு, கேழ்வரகு முதலிய புன்சை தானியங்களை அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு சிறப்பு பரிசுத் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆம்.

திரு. வை. பாலசுந்தரம்: கழக ஆட்சிக்குப் பிறகுதான் பசுமைப் புரட்சி என்று பல புதுமைகளைச் செய்து கருணை, காவிரி, காஞ்சி போன்ற பெயர்களை நெல்மணிகளுக்கு வைத்து ஒரு சிறப்பை உருவாக்கியது. அதேபோல் புன்செய் தானியங்களான சோளம், கம்பு போன்ற தானியங்களுக்கும் இப்படிப் பட்ட பெயர்களை வைத்து விவசாயிகளை அரசு உற்சாகப் படுத்துமா?